PUBLIC RELATIONS DIVISION

Name of the Newspaper: Dinathanthi Date: 13/10/17

# மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு மினி பஸ், பேட்டரி கார் வசதி

சென்னை, அக்.13– மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு மினி பஸ், பேட்டரி கார் சேவை தொடங்கப்பட்டு உள்ளது.

## பேட்டரி கார்

சென்னையில் விமான நிலையம்–நேரு பூங்கா, விமான நிலையம்–சின்னமலை, ஆலந்தூர்–பரங்கிமலை இடையே மெட்ரோ ரெயில் போக்குவரத்து நடந்துவருகிறது. மெட்ரோ ரெயில் பயணிகளுக்காக பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. விமான நிலையத்தில் உள்ள மெட்ரோ ரெயில் நிலையத்தில் பேட்டரி கார் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்யும் மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் விமான நிலைய ரெயில் நிலையத்தில் இருந்து பேட்டரி காரில் விமான நிலையத்தின் வருகை பகுதிக்கு செல்லமுடியும். வடபழனி மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு வரும் பயணிகள் பேட்டரி கார் மூலம் அருகில் உள்ள வணிக வளாகத்துக்கு இலவசமாக செல்லலாம்.

## மினி பஸ் சேவை

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

நேரு பூங்கா ரெயில் நிலையத்தில் இருந்து எழும்பூர், சென்டிரல் ரெயில் நிலையம் செல்லும் பயணிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்த மாநகர போக்குவரத்து கழகத்திடம் பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி நேரு பூங்காவில் இருந்து எழும்பூர் வழியாக சென்டிரல் வரை மினி பஸ் சேவை தொடங்கப்பட்டு உள்ளது. பயணிகளுக்கு தேவைப்படும் மற்ற ரெயில் நிலையங்களிலும் மினி பஸ் சேவையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இதில் மினி பஸ்களுக்கான கட்டணம் செலுத்த வேண்டும்.

விமான நிலையம், வடபழனி, கோயம்பேடு ரெயில் நிலையங்களில் இலவச பேட்டரி கார் சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

## 65 ஆயிரம் மரங்கள்

மெட்ரோ ரெயில் பணியின் போது வெட்டப்பட்ட மரங்களுக்கு பதிலாக மரக்கன்றுகளை நட ஐகோர்ட்டு உத்தரவிட்டது. ஒரு மரம் வெட்டினால் 10 மரக்கன்றுகள் நட உத்தரவிடப்பட்டது. ஆனால் மெட்ரோ ரெயில் நிறுவனம் ஒரு மரத்திற்கு பதிலாக 25 மரக்கன்றுகளை நட்டுள்ளது. அதன்படி தற்போது 65 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிறுவன தலைமை அலுவலகத்தில் மட்டும் 45 வகையான 1,300 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதுதவிர பல்லாவரம், பெசன்ட்நகர், திருவான்மியூர் பகுதிகளில் உள்ள பள்ளிகளிலும், புழல் சிறையிலும் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.